**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.02/2013**
**Deposition of witness for prosecution –PW–3 (LW 3)**

| | | |
|---|---|---|
| Name | : | ஹரிணி |
| F/H Name | : | நாகராஜன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | மருத்துவர் |
| Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 10th day of June 2026.

எதிரி ஆஜர் இல்லை. மனுவின் மூலம் விலக்களிக்கப்பட்டுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து மதுரையில் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை. 2012ம் வருடம் நான் 8ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். நான் ஒரு 04.00 மணியை போல பள்ளிகூடம் முடித்து விட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது எனது அப்பா நீதிமன்றத்தில் வேலைக்கு செல்வதால் பணிக்கு சென்றுவிட்டார். எனது அம்மா யூனியன் அலுவலகத்தில் வேலைக்கு செல்வதால் பணிக்கு சென்றுவிட்டார். நான் அப்போது வீட்டில் இருந்தேன். ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். எனது அம்மாவினுடைய உறவினர் என்று சொன்னார். நான் உள்ளே வரச்சொன்னேன். தண்ணீர் கேட்டார். நான் அள்ளிக்கொண்டு வந்து கொடுத்தேன். அப்போது ஐஸ் வாட்டர் கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். ரூ.5/– கொடுத்து கடையில் வாங்கி வர சொன்னார். நான் வாங்கி வந்தேன். அப்போது என் தங்கை வீட்டிற்கு வந்துவிட்டார். அவரிடமும் காசு கொடுத்து ஏதாவது வாங்கி வர சொன்னார்.அதோடு அவரசத்தில் எனது அம்மா வந்தவுடன் சொல்லிவிடும்மா நான் சென்று வருகிறேன். நான் டியூசன் சென்றுவிட்டு 09.00 மணிக்கு வந்தேன். அப்போது எனது அப்பா வீட்டிற்கு வந்தவுடன்

டேபிளுக்கு கீழே வெள்ளி டம்ளர் விழுந்து கிடந்தது. நான் டியூசன் முடித்து வந்தவுடன் அப்பா என்னிடம் கேட்டார். நான் ஒருவர் உங்களை பார்க்க வந்ததாக சொன்னேன். அவர் என் அம்மாவின் தாய்மாமன் என்று சொன்னார். அதன்பிறகு என் தந்தை பீரோவை பார்த்தபோது நகைகள் காணாமல் போய் இருந்தது. அப்புறம் எனது அம்மா வந்துவிட்டார். தேடிப்பார்த்தோம் நகைகளை காணவில்லை. எனது அப்பா புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு கு.வி**</u>

சம்பவத்தின்போது நாங்கள் இருந்தது காம்ப்ளக்ஸ் வீடு என்றால் சரிதான். காம்ப்ளக்ஸ் வீடு என்பதால் அங்கு எப்போதும் ஆள் நடமாட்டம் இருந்து கொண்டு இருக்கும் என்றால் இருப்பார்கள், அனைவரும் வீட்டிற்குள்ளாக தான் இருப்பார்கள், வெளியில் இருக்க மாட்டார்கள். அந்த காம்ப்ளக்ஸிற்கு வாட்ச்மேன் இருந்தார்களா என்றால் இல்லை. வேறு யாரேனும் காவலுக்கு அல்லது வருவோர் செல்பவர்களை பார்ப்பதற்கு இருந்தார்களா என்றால் இல்லை. நான் வெளியில் சென்ற பிறகு எனது தங்கை வீட்டிற்குள்ளாக தான் சம்பவத்தன்று இருந்தாரா என்றால் ஆமாம். நான் வீட்டிற்கு திரும்ப வந்ததும் எனது தங்கை வீட்டில் இருந்த நபர் இங்கு சென்றார் அங்கு சென்றார் என ஏதேனும் சொன்னாரா என்றால் இல்லை. சம்பவத்தன்று நான் பார்த்தாக சொல்லும் நபரை சம்பவத்திற்கு முன்பாகவும் அதற்கு பின்பாகவும் எங்கேயும் பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் தான் புகைப்படத்தை காண்பித்து இந்த நபர் தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என சொன்னார்கள் என்றால் என்னிடம் நிறைய புகைப்படங்களை காண்பித்தார்கள் நான் தான் போலீசாருக்கு அந்த நபரை அடையாள படுத்தினேன். எனக்கு புகைப்படங்களை பிரிண்டட்டாக தான் காண்பித்தார்கள். அவ்வாறு புகைப்படங்களை பார்த்து எதிரியை அடையாள படுத்தியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பாக போலிசார் வழக்கு ஆவணங்களை கொடுத்து என்னை படிக்க சொன்னார்கள் என்றால் சரிதான். 2013ம் ஆண்டு சம்பவம் நடந்ததாக உள்ள போது நான் சிறுவயதாக இருந்ததால் சம்பவம் பற்றி எனக்கு தற்போது எந்த ஞாபகமும் இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை படித்து பார்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனக்கு தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை சம்பவமும் சம்பவத்தில் ஈடுபட்ட நபரையும் ஞாபகம் உள்ளது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எனது வீட்டில் திருடு போன சம்பவத்திற்கு

எதிரியை பொய்யாக இந்த வழக்கில் இணைத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை**

வழக்கு ஆவணங்களில் வழக்கு சம்பவ தேதியை மட்டும் தான் நான் பார்த்தேன். மற்றது எல்லாம் எனக்கு ஞாபகம் உள்ளது, அதை வைத்து தான் சாட்சியம் சொன்னேன்.

**எதிரி தரப்பு கு.வி**

நான் சொல்வது பொய் என்றாலும் வழக்கு ஆவணங்களை படித்து விட்டு தான் நான் முழுவதும் சாட்சியாக சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.10 17:26:34 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.02/2013**
**Deposition of witness for prosecution –PW-4 (LW 5)**

| | | |
|---|---|---|
| Name | : | ரவீந்திரன் |
| F/H Name | : | குப்புசாமி |
| Village | : | கீழக்கரை |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 10th day of June 2026.

எதிரி ஆஜர் இல்லை. மனுவின் மூலம் விலக்களிக்கப்பட்டுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஓய்வில் உள்ளேன். 2012ம் வருடம் ஒரு நாள் நான் அப்போது மீன் வாங்குவதற்காக கீழக்கரை பஸ் ஸ்டாப் அருகில் உள்ள மீன் மார்க்கெட்டில் நின்று கொண்டிருந்தேன். அப்போது போலீசார் நாகராஜன் வீட்டில் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். நான் அந்த வழியாக வந்தேன். அப்போது போலீசார் நாகராஜன் வீட்டை பார்த்து வரைபடம் வரைந்தார்கள். எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.வி**

போலீசாரிடம் நான் ஒரு இடத்தில் தான் கையொப்பம் செய்தேன். நான் போலீஸ் ஸ்டேசனுக்கு செல்லவில்லை. நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதி இருந்தது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மீன் மார்க்கெட்டிற்கு செல்லும் போது மணி சுமார் காலை 11.00 இருக்கும். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்தேனா என்றால், அவர் போலீசார் விசாரணை செய்து படம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அ.சா.3 எனது உறவினரா என்றால் இல்லை. வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றாலும் போலீசார் கேட்டுக்

கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் வெள்ளை பேப்பரில் தான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.10 17:26:46 +0530